முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1095

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.09.2022**, புதன்கிழமை

1. ஞான சித்தியே அரங்கா வாழ்க
ஞானிகள் பலம்கொண்ட தேசிகா வாழ்க
தானதர்மம் பெருக்கி உலகை மீட்க
தனிப்பெரும் தவத்தை சக்தியாக வழங்குகின்ற குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 11ம் நாள், 28.09.2022 புதன்கிழமை)
ஊழ்வென்று கலியுக மக்களை காக்க
உயர்வாக எந்தன் சக்தியாக வாழுகின்ற
3. ஆளுமை நிறைந்த ஆறுமுக அரங்கனே
அண்ணலே உன் தர்மமும் சன்மார்க்கமும்
இந்த உலகை மீட்கும் உன் தர்மமும் சன்மார்க்கமுமே
இந்த உலகை காத்தருளும்
4. அருளாக அரங்கன் நீ தருகின்ற அமுதும்
அளவில்லா ஞான உபதேசங்களும்
வழுவாது அரங்கன் திருவடி பற்றும் மக்களுக்கு
வல்லமைபட வரமாக இறங்கி அருள
5. அருளவே அரங்கன் உன் சக்திகொண்டே
ஆறுமுகன் அற்புதத்தை நடத்துவேன்
வரமென உன்வழி தொண்டர்களை மிகுதியாக்கி
வல்லமை கூட்டி காத்தருள்வேன்
6. அருளாக வரும் ஞானியே
ஆற்றல்மிகுந்த மாதவசியே
பெருமைபட உன் நாமஜெபத்தைச்சொல்ல
பேருலகில் அனைவருக்கும் சித்தி முக்தி உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–